ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்செங்குன்றூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருச்செங்குன்றூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
    வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
    ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
    ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
    ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ 5 ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
    ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
    ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## திருவாய்மொழி – வார்கடா அருவி

‡ வார் கடா அருவி யானை மா மலையின் ⋆
மருப்பிணைக் குவடிறுத்துருட்டி ⋆
ஊர் கொள் திண் பாகன் உயிர் செகுத்து ⋆
அரங்கின் மல்லரைக் கொன்று சூழ் பரண் மேல் ⋆
போர் கடா அரசர் புறக்கிட ⋆
மாட மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த ⋆
சீர் கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாறெங்கள் செல் சார்வே ‖ **8.4.1** ‖

எங்கள் செல் சார்வு யாமுடை அமுதம் ⋆
இமையவர் அப்பன் என் அப்பன் ⋆
பொங்கு மூவுலகும் படைத்தளித்தழிக்கும் ⋆
பொருந்து மூவுருவன் எம் அருவன் ⋆
செங்கயல் உகளும் தேம் பணை புடை சூழ் ⋆
திருச்செங்குன்றூர் திருச்சிற்றாறங்கமர்கின்ற ⋆
ஆதியான் அல்லால் ⋆
யாவர் மற்றென் அமர் துணையே ‖ **8.4.2** ‖

என் அமர் பெருமான் இமையவர் பெருமான் ⋆
இரு நிலம் இடந்த எம் பெருமான் ⋆
முன்னை வல் வினைகள் முழுதுடன் மாள ⋆
என்னை ஆள்கின்ற எம் பெருமான் ⋆
தென் திசைக்கணி கொள் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாற்றங்கரை மீ பால் நின்ற எம் பெருமான் ⋆
அடி அல்லால் சரணம் நினைப்பிலும் ⋆
பிறிதில்லை எனக்கே ‖ **8.4.3** ‖

பிறிதில்லை எனக்குப் பெரிய மூவுலகும் நிறையப் ⋆
பேர் உருவமாய் நிமிர்ந்த ⋆
குறிய மாண் எம்மான் குரை கடல் கடைந்த ⋆
கோல மாணிக்கம் என் அம்மான் ⋆
செறி குலை வாழை கமுகு தெங்கணி சூழ் ⋆
திருச்செங்குன்றூர் திருச்சிற்றாறறிய ⋆
மெய்ம்மையே நின்ற எம் பெருமான் ⋆
அடி இணை அல்லதோர் அரணே ‖ **8.4.4** ‖

அல்லதோர் அரணும் அவனில் வேறில்லை ⋆
அது பொருள் ஆகிலும் ⋆
அவனை அல்லதென் ஆவி அமர்ந்தணைகில்லாது ⋆
ஆதலால் அவன் உறைகின்ற ⋆
நல்ல நான்மறையோர் வேள்வியுள் மடுத்த ⋆
நறும் புகை விசும்பொளி மறைக்கும் ⋆
நல்ல நீள் மாடத் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாறெனக்கு நல் அரணே ‖ **8.4.5** ‖

எனக்கு நல் அரணை எனதார் உயிரை ⋆
இமையவர் தந்தை தாய் தன்னை ⋆
தனக்கும் தன் தன்மை அறிவரியானைத் ⋆
தடங்கடல் பள்ளி அம்மானை ⋆
மனக்கொள் சீர் மூவாயிரவர் ⋆
வண் சிவனும் அயனும் தானும் ஒப்பார் வாழ் ⋆
கனக்கொள் திண் மாடத் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாறதனுள் கண்டேனே ‖ **8.4.6** ‖

திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறதனுள் கண்ட ⋆
அத்திருவடி என்றும் ⋆
திருச்செய்ய கமலக் கண்ணும் ⋆
செவ்வாயும் செவ்வடியும் செய்ய கையும் ⋆
திருச்செய்ய கமல உந்தியும் ⋆
செய்ய கமல மார்பும் செய்ய உடையும் ⋆
திருச்செய்ய முடியும் ஆரமும் படையும் ⋆
திகழ என் சிந்தை உளானே ‖ **8.4.7** ‖

திகழ என் சிந்தையுள் இருந்தானைச் ⋆
செழு நிலத்தேவர் நான்மறையோர் ⋆
திசை கை கூப்பி ஏத்தும் ⋆
திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை ⋆
புகர் கொள் வானவர்கள் புகல் இடம் தன்னை ⋆
அசுரர் வன்கையர் வெங்கூற்றை ⋆
புகழுமாறறியேன் பொருந்து மூவுலகும் ⋆
படைப்பொடு கெடுப்புக் காப்பவனே ‖ **8.4.8** ‖

படைப்பொடு கெடுப்புக் காப்பவன் ⋆
பிரம பரம் பரன் சிவப் பிரான் அவனே ⋆
இடைப் புக்கோர் உருவும் ஒழிவில்லை அவனே ⋆
புகழ்வில்லை யாவையும் தானே ⋆
கொடைப் பெரும் புகழார் இனையர் தன் ஆனார் ⋆
கூரிய இச்சையோடொழுக்கம் ⋆
நடைப் பலி இயற்கைத் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாறமர்ந்த நாதனே ‖ **8.4.9** ‖

அமர்ந்த நாதனை அவர் அவர் ஆகி ⋆
அவர்க்கருள் அருளும் அம்மானை ⋆
அமர்ந்த தண் பழனத் திருச்செங்குன்றூரில் ⋆
திருச்சிற்றாற்றங்கரையானை ⋆
அமர்ந்த சீர் மூவாயிரவர் ⋆
வேதியர்கள் தம்பதி அவனி தேவர் வாழ்வு ⋆
அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை ⋆
நான்முகனை அமர்ந்தேனே ‖ **8.4.10** ‖

‡ தேனை நன் பாலைக் கன்னலை அமுதைத் ⋆
திருந்துலகுண்ட அம்மானை ⋆
வான நான்முகனை மலர்ந்த தண் கொப்பூழ் ⋆
மலர் மிசைப் படைத்த மாயோனை ⋆
கோனை வண் குருகூர் வண் சடகோபன் ⋆
சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
வானின் மீதேற்றி அருள் செய்து முடிக்கும் ⋆
பிறவி மா மாயக் கூத்தினையே ‖ **8.4.11** ‖

**திரு செங்கமலவல்லி சமேத இமையவரப்பன் திருவடிகளே சரணம்**